Regd. No. M. 4408.] [தனிப் பிரதி 0—1—6.

ஆசிரியர்:- G. தெக்ஷிணாமூர்த்தி பிள்ளை. உதவி ஆசிரியர்:- G. கண்ணுசாமி பிள்ளை.

# "AGASTHIAN."

# அகஸ்தியன்.

மாதாந்தர சித்த வைத்தியத் தமிழ்ப் பத்திரிகை.

நோய்நாடி நோய்முதனாடி யது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

அற்றல் அளவறிந்துண்க அஃதுடம்பு
பெற்றன் நெடிதுய்க்கு மாறு — குறள்

மலர் 2. திருத்துறைப்பூண்டி 1942-ஆ மார்ச்சு-மீ 1௳ இதழ் 2.

## பொருளடக்கம்.

—:0:—


| | |
|---|---|
| வைகறைப் பெண் | 'பக்தன்' |
| மதிப்புரை | .... .... .... .... |
| ரஜஸ்வலை | 'சீலாம்பிகை.' |
| தேரையர் | Dr. P. V. தேவராஜ முதலியார் |
| வைத்திய போர்டு | தலையங்கம் |
| மந்திர சக்தி | நா. க. பா. |
| கொடி வணக்கம் | அ. சிதம்பர முதலியார் |
| உதயசங்கரன் | நாகை என். பாலசுப்ரமண்யம் |
| சித்த வைத்தியத்தின் வலிமை | Dr. N. சுப்ரமண்யம் L. I. M. |
| அகஸ்தியன் ஆண்டுவிழா | ... .... ... .... |


## வைகறைப் பெண்.

'பக்தன்.'

1. வைகறை போதில் வளைகுலுங்கப்—பெண்ணே
   வாழ்த்திக் கணவன் தொழுதெழுவாய்!
   மைகறை நீக்கி முகந்துடைத்து—மேனி
   மீது கலையுந் துகில் திருத்து!

2. கொக்கரக் கோவென்று கோழிகூவுங்—குயில்
   குக்கூகு வென்று சிறகடிக்கும்
   அக்காவா தங்கைவா என்றுசொல்லிப்—
   பெண்ணே
   அன்புடன் பெண்களைக் கூட்டிச் செல்லாய்!

3. முத்துப் பனித்தரை மீதுசென்று—மணி
   நீர்க்குடந் தாங்கி நலம் புரிவாய்!
   சுத்தம் மிகத்தருஞ் சாணமிட்டுப்—
   பெண்ணே
   சுந்தரக் கையினல் கோல மிடு!

4. தங்கச் சுடர்தருங் கீழ்திசையிற்—கதிர்
   தோன்றுங் கணத்திற் றலை வணங்காய்!
   பொங்கிடவே நல்ல பொற்குணங்கள்—இந்தப்
   பூமி தழைக்கவே போற்றி செய்வாய்!

அகஸ்தியனில் பிரசுரமாகும் கதைகள் கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள் கற்பனைப் பெயர்கள்.
அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

# பரிவர்த்தனைப் பத்திரிகைகள்.

## 'குமரன்.'

திரு. S. முருகப்பா அவர்களை ஆசிரியராகப் பெற்று, வியாழன் தோறும் வெளிவரும் 'குமரன்' என்னும் வாராந்தரச்சஞ்சிகை பரிவர்த்தனைக்காக அனுப்பப் பெற்றமைக்கு நாம் மகிழ்ச்சி யடைகிறோம். திரு. T. K. சிதம்பரநாத முதலியார் அவர்களின் சிறந்த கட்டுரையும், பல அறிவானுன்ற கட்டுரைகளும், ஸ்தல சமாசாரங்களும் நிறையப் பெற்றிருக்கிறது. இஃது சுமார் இருபது ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் அரிய சேவை செய்து வருகிறது.

வருட சந்தா ரூ. 5—0—0.
ஆறு மாதம் ரூ. 3—0—0.

ஆசிரியர்,
குமரன்,
காரைக்குடி.

## ஆரிய தருமம்.

அக்னிஹோத்திரம் கோபால தேசிகாசாரியார் அவர்களை ஆசிரியராகப்பெற்று வியாழக்கிழமைதோறும் வெளிவரும் 'ஆரிய தருமம்' என்னும் வாரப்பதிப்பு பரிவர்த்தனைக் காப்பியாக வரப்பெற்றோம். இது சுமார் 28 ஆண்டுகளாக ஹிந்து மதத்தின் நன்மைக்காக அரிய சேவை செய்து வருகிறது. வடமொழியிலுள்ள இலக்கியங்களை ஆராய்ந்து தெளிவுபடுத்தும் அரிய கட்டுரைகளும், அரசியல்விஷயங்களும் நிறைந்தசெந்தமிழ் சஞ்சிகையாகும். ஹிந்து தர்மத்துக்கு முக்கியமானது.

வருட சந்தா ரூ. 3—0—0.
ஆறு மாதம் ரூ. 1—8—0.

ஆசிரியர்,
ஆரிய தருமம்,
கும்பகோணம்.

## பிரசண்ட விகடன்.

(ஆசிரியர் N. முனிசாமி முதலியார்)

சென்ற 9 ஆண்டுகளாக நகைச்சுவை ததும்ப அரிய பெரிய நீதிகளைப் பரப்பி மாதமிருமுறை வெளிவரும் மேற்படி பத்திரிகை வரப்பெற்றோம். 9-வது மலர்22-வது இதழில் "தமிழை எப்படி எழுத வேண்டும்?" என்னும் ருசிகரமான விவாதத்தை ஆரம்பம் செய்துவைத்திருக்கிறது. திரு. தெ. மு. சிதம்பரரகுநாதன் அவர்கள் முதன் முதல் எளிய நடையே சிறந்ததென்று தர்க்க பூர்வமாய் விவாதித்து அழகாக எழுதியிருக்கிறார். தமிழ் வளர்ச்சியில் சிரத்தையுடையவர்கள் இவ்விவாதத்தில் கலந்து கொள்ளலாம்.

வருட சந்தா ரூ. 2—0—0.
தனிப்பிரதி ரூ. 0—1—6.

கிடைக்குமிடம்:—
ஆசிரியர்,
பிரசண்ட விகடன்,
6, லாயர் சின்னத்தம்பி முதலித்தெரு,
சென்னை.

## நவலட்சுமி.

ஆசிரியர்,
(ப. மு. முத்துசாமி ரெட்டியார்)

மாதம் ஒரு முறை வெளிவரும் இச் சஞ்சிகை வரப்பெற்றோம். அரசியல், சமுதாயம், கலை, மொழி முதலிய பொருள்பற்றிய அரிய கட்டுரைகளும், சிறு கதைகளும், தொடர்கதையுங்கொண்டு எளிய நடையில் எழுதப் பெறுகிறது. செ. ச.

வருட சந்தா 1—75.
தனிப்பிரதி 0—10.

கிடைக்குமிடம்:—
ஆசிரியர்,
நவலட்சுமி,
கொம்பனித் தெரு, கொழும்பு.

## இந்திரா.

திரு. ராம. பழனியப்ப செட்டியார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மாதந்தோறும் வெளிவரும் மேற்கண்ட சஞ்சிகையின் 2-வது மலர் 4-வது இதழ் வரப்பெற்றோம். இதன் முகப்புப் படம் கண்களைக் கவருகின்றது. புத்தக ரூபத்தில் 90 பக்கங் கொண்டது. பதிப்பு சுத்தமாகவும் லட்சணமாகவும் காணப்படுகிறது. ஆசிரியர் எம். எஸ். சுப்ரமணிய ஐயர், எஸ். அம்புஜம்மாள் முதலிய சிறந்த எழுத்தாளர்கள் கட்டுரை வழங்கி யிருக்கிறார்கள். "நகை யாருக்குச் சொந்தம்," என்று 'உமா' ஒரு அழகான வாழ்க்கை நிகழ்ச்சியைச் சித்தரித்திருக்கிறார். 'தாசிப் பெண்' என்ற அரிய கதை தொடர்ந்து வெளியிடப்பெறுகிறது. 'பின் பனிக் காலம்' நெஞ்சை அள்ளுகிறது. சுருங்கச் சொன்னால், தமிழ் நாட்டில் பிரசித்திபெற்ற ஆசிரியர்களின் நவரசந் ததும்புங் கதைகளும், கட்டுரைகளும் துலங்க அழகிய சித்திரப் படங்களுடன் வெளியிடப்பெறும் உயர்ந்த பத்திரிகையாகும்.

தனிப்பிரதி 0—2—6.

கிடைக்குமிடம்:—
ஆசிரியர்,
இந்திரா,
செட்டிநாடு S. I. R.

வியாபார விருத்திக்குச் சிறந்த
நண்பன்
'அகஸ்தியன்'



ரஜஸ் ரக்ஷா.

சூதக நிலை சரியாய் இல்லாவிடில் பெண்களின் ஆரோக்கியம் கெட்டுப்போகிறது. வீட்டின் எஜமானி குதூகலமாய் இருந்தால் வீடு முழுவதும் லக்ஷ்மீகாமாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை அவள் சந்தோஷமாய் இருப்பதற்கு ரஜஸ் ரக்ஷா அவசியம் கையிலிருக்க வேண்டும் சூதக சம்பந்தமாய் ஏற்படும் சகல ரோகங்களையும் சௌக்கியம் செய்வதில் இணையற்றது. சீக்கு நிலைமைக்கு எழுதவும்.

மானேஜர், விலை ரூ. 1-0-0.
V. மெடிக்கல் ஹால்.
திருத்துறைப்பூண்டி P. O.

# "அகஸ்தியன்."

மாதம் ஒருமுறை வெளிவரும் ஓர் உயரிய வெளியீடு

தாய் மொழித் தமிழை ஆய்வுற வின்பம். சித்த வைத்தியத்தை நத்துதலின்பம்

மலர் 2. | திருத்துறைப்பூண்டி 1942-ஹு மார்ச்சு-மீ 1உ | இதழ் 2.


பெண்ணுலகம்.

## ரஜஸ்வலை.

### கடிதம் 4.

எனது உயிருக்கு உயிரான கமலத்துக்கு எல்லா நன்மைகளும் உண்டாகப் பிரார்த்திக்கிறேன்.

எத்தித் திரியுமந்தக் காக்கை—அதற்கு
இரக்கப்பட வேணும் பாப்பா

என்று கவிச்சக்கிரவர்த்தி பாரதியார் சொன்னபடி சிலசமயங்களில் கடிதம் எழுதாமல் காக்கையைப்போல ஏமாற்றிவருகிற உன்னிடத்தில் நான் இரக்கப்பட்டு மன்னித்துவிடுகிறேன்.

இந்தக் கடிதத்தில் சூதகத்தடங்கல் என்பதைப்பற்றி எழுதப் போகிறேன். சூதகத் தடங்கல் என்பதற்கு இங்கிலீஷில் அமெனோரியா (Amenorrhea) என்று சொல்லுவார்கள். இந்த அமெனோரியாவுக்கும் பயம் சோகம் திகில் முதலிய ஐயவுணர்ச்சிகளுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டென்பதை முதன்முதல் சொல்லியாக வேண்டும். இதை விளக்கி வைக்கக் கோடிவீட்டு அலமேலுக்கு ஒரு கதை சொன்னேன். அதே கதையை உனக்கும் சொல்வது அவசியமாகத் தோன்றுகிறது. கோடிவீட்டு அலமேலு என்னைப் பார்த்து போனாலும் போகிறது வந்தாலும் வருகிறது என்று ஒரு கேள்வி கேட்டுவைத்தாள். "என்னடி நீலாம்பிகை! உன் உடம்பில் சூடு சுரணை இருக்கிறதா? நீண்டலைப் பற்றி வரிந்து கட்டிக்கொண்டு எழுதுகிறாயே! உனக்கு வெட்கமில்லையா?" என்று வைதாள். அதற்காகத்தான் ஜெயமேரியின் கதையை எடுத்தேன். ஜெயமேரியை உனக்குக்கூடத் தெரிந்திருக்கும். மூன்றாவது பாரத்தில் நம்முடன் வாசித்தாளே கிருஸ்துவப் பெண். பைபிள் பாடத்தில் நூற்றுக்கு நூறு வாங்குவாள். பூகோளத்திலும் முதல்தாமானவள்; ஆப்கானிஸ்தான் எங்கிருக்கிறதென்றால் பம்பாய்க்கும் ஏடனுக்கும் நடுப்புற இருக்கு என்று கன்னத்தில் அறைந்து பதில் சொல்லுவாள். வளர்த்துவானேன், ஜெயமேரி பதினேழு வயதுவரையில், ஒன்றுந் தெரியாத பேதை! வெளுத்ததெல்லாம் பேப்பர்; கருத்ததெல்லாம் மை என்னும் பரமசாது. கிருதயுகத்திலே பிறக்க வேண்டியவள் தவறிப்போய் கலியுகத்திலே பிறந்துவிட்டாள்.

ஜோசப்பைக் கண்டால் ஒரு தனியுணர்ச்சி ஏற்படுவதுமட்டும் அவளுக்குத் தெரியுமே ஒழிய ஏன் என்று தெரியாது. ஜோசப் ஒரு சூடிக்கையான பையன். அன்புடையவர்களுக்கு ஆனந்த வெறியுமுண்டல்லவா? ஜோசப் தனியாக ஜெயமேரியைச் சந்தித்தபோது அன்பின் பரவசத்தனாகி அவளது இதழ்களில் ஒரு முத்திரையிட்டு ஓடிவிட்டான். இது ஜெயமேரிக்கு பிரமாதமான நடுக்கத்தை விளைவித்துவிட்டது. புருஷன் மனைவிக்குள் நிகழக்கூடிய ஒரு சம்பவம் தனக்கு நேர்ந்துவிட்டதாய் நினைத்துப் பெரிதும் அச்சமடைந்தாள். இந்த விபரீத சம்பவத்தால் தனக்குக் கருப்பமுண்டாகிவிடுமோ என்று தினசரி பயந்து வந்தாள். அதற்குத் தக்கவாறு வழக்கப்படி அவள் முழுகவேண்டிய காலம் வந்தும் அவளுக்குத் தீண்டல் வரவில்லை. தன் சிநேகிதிகளிடம் தன் காதலன் தனக்கு முத்தமிட்டதைச் சொல்லவோ வெட்கம். இப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். ஆறு மாதமாகிற்று, ஆறு மாதமும் மாதவிடாய் தோன்றவில்லை. இச்செய்தி பெற்றோர்கள் காதுக்கு எட்டவும் அவள்மீது சந்தேகங் கொண்டு பாதிரியாரிடம் அவளைப் பாவ மன்னிப்புக் கேட்கும்படிசெய்தனர். தன்காதலன் தனக்கு முத்தமிட்ட செய்தியை மதகுருவிடம் சொல்லி அந்தப் பாவத்தை மன்னிக்கும்படி அவள் கண்ணீர் சிந்தினாள். இதைக் கேட்டதும் பாதிரியார் இந்தமாதிரியும் பெண்கள் உலகத்தில் இருக்கிறார்களா என்று ஆச்சரியப்பட்டார். பிறகு ஆண் பெண் ரகசிய (Sexual Books) நூற்களை அவளிடம் கொடுத்து வாசிக்கச் செய்ய வேண்டுமென்று பாதிரியார் பெற்றோர்களுக்கு உபதேசித்தார். ஜெயமேரி மேற்படி புஸ்தகங்களைப் படித்தவுடன் தான் நிரபாதி என்பது புலனாயிற்று. தன் மனதிலிருந்த அச்சமும் திகிலும் அகன்றன. மறு மாதத்தில் வழக்கம்போல தீண்டல் வந்து முழுகினாள்.

இந்தக் கதையை அலமேலு கேட்டவுடன் பெருமூச்சுவிட்டுக் கொண்டு மூக்கின்மீது கையை வைத்தாள். "அப்படியென்றால், பெண்களுக்கு உபகாரமாய் இருக்கட்டும்; இன்னும் இவ்விஷயமாய் நிறைய எழுதிக் குவியடியம்மா" என்று எனக்கு உத்தரவு போட்டாள்.

இந்தக் கதையினால் பயம் திகில் துக்கம் என்னும் சோகவுணர்ச்சிகளுக்கும் அமெனோரியாவுக்கும் உள்ள தொடர்பு நன்றாகத்தெரியும். பயந்தவள் திகில்பட்டவள் துக்கப்பட்டவள் வியாகூலமடைந்தவள் இவளுக்கெல்லாம் சூதகநிலை நிச்சயமாய் கெட்டுப்போகும். அநேகமாய் அந்த வியாதி சூதகத் தடங்கலாய்த்தானிருக்கும்.

உனதன்புள்ள,
'நீலாம்பிகை'

# தேரையர்.

திருப்பாதிரிப்புலியூர்
வைத்தியரத்னம் P. V. தேவராஜ முதலியார் M. D.(s)

அகஸ்தியன் முதலாவது ஆண்டுவிழாவை முன்னிட்டு எழுதப்பெற்றது.

தேரையரைப் பற்றிக் கர்ண பரம்பரையாகச் சொல்லப்படும் கதை எல்லோருக்கும் தெரிந்ததொன்று. கபாலத்தை ஆப்பரேஷன் செய்து அதனுள்ளிருந்த தேரை போன்றதொரு புழுவை அகற்றித் தலைநோயைத்தவிர்த்ததின் காரணமாய் அவருக்குத் தேரையர் என்றபெயர் வழங்கியதாகக் கூறுவர். இஃது பொருந்துமேற்கொள்க. வடமொழியில் இவரை மண்டூக மஹரிஷி என்று சொல்லிவருவதும் பொருந்துவதாகத் தோன்றவில்லை. தேரையர் 100 என்றும், 500 என்றும், 1500 என்றும் சில நூற்கள் வெளிவந்திருக்கின்றன. இந்தத் தேரையரைப்பற்றி நமக்கு ஒரு தகவலும் கிடைத்திலது.

வடமொழி தென்மொழி தெலுங்கு முதலிய பாஷைகளில் பெரும் பாண்டித்திய முடையவராயும் சைவ வைணவ வேத ஆகம நூற்களில் வல்லுனராயும் தேரையர் என ஒருவர் நம் தமிழ் நாட்டில் இருந்ததாகத் தெரிகிறது. இவரது நாடு நகரம் குலம் முதலியன விளங்கவில்லை. சிலர் இவரை பார்ப்பனர் எனக் கொள்வது தேரையர் என்ற அவரது பேர்கொண்டுபோலும். இவர் நூல்களில் ஒன்ருகிய கரிசல் 5வது செய்யுள் தூர்க்கி வணக்கத்தில்,

"உத்த மஞ்சிவாடு சுமிநீவென வேமனர் வடுகிலுரைத்தல் போல"

என்று கூறியதாகக் கொண்டு இவர் வேமனர் காலத்திற்குப் பிற்பட்டவர் என்று கூறலாம்.. வேமனர் காலமோ கி. பி. 1386க்கும் 1505க்கும் இடையிட்ட காலம். ஆதலால் இவர் ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன் இருந்தவர் என்று கூறலாம்.

இவர் செய்தருளிய நூற்கள்:— சிகாமணி வெண்பா, நிகண்டு, சேகரப்பா, காப்பியம், தருநாடகம், அந்தாதி, மிகாவண்ணம், நாண்மாலை, யமகவெண்பா, [illegible]துகைப்பா, கரிசல், நீர்நிறக்குறி, நீர்நெய்க்குறி, தயிலவருக்கச் சுருக்கம், தினக்கிரமாலங்காரம், சிகிச்சாக்கிரமம், நோய்மருந்தளவை, பிரதானகுண மூலித்தரு, வயித்தியபள்ளு நாடகம், மருத்துப் பாரதம், என இருபத்தொன்றென்பர்.

இவர் செய்த நூற்களெல்லாம் ஒருவரிடமும் ஒருங்கே கிடைப்பதில்லை. பலரிடமும் இவருடைய எல்லா நூலும் கிடைப்பதாகவும் தெரியவில்லை. இதுவரை அச்சில்வந்த நூற்கள் 'தேரையர் கரிசல் தயிலவருக்கச் சுருக்கம்' 'நீர்நிறக்குறி' நெய்க்குறி சாஸ்திரம், பதார்த்தகுண சிந்தாமணி, மருத்துப் பாரதம், தேரையர் எமக வெண்பா முதலிய நூல்களே. குறிப்பிட்டுள்ள கால அளவில் இத்தகைய விரிவான ஆராய்ச்சியைச் செய்ய இயலாத காரியமேயாயினும், ஒருவாறு சுருக்கமாகச் சிலவிஷயங்களைச் சொல்லத்துணிகின்றேன்.

தேரையர் தைலவருக்கச் சுருக்கத்தில் 22 வித இலக்கணத்தோடு முடித்தால் ஒரு தைலம் நன்கு முடியும் எனக் குறிப்பிட்டிருக்கிறார். இதே விதியை லேகியம் சிந்தூரம் பஸ்மங்களுக்கும் விதியாகக் கொள்ளவேண்டும் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். அதன் விபாம வருமாறு:—

1. குடிநீர் கற்க முதலியவைகளுக்கு ஆகுந்திரவியங்களை மாறுபாடில்லாதவண்ணம் பார்வையிடுதல். 2. அவைகளைச் சுத்திசெய்குதல். 3. பச்சையாயாவது அனலில் வறுத்தாவது சூரியபுடம் வைத்தாவது இடிக்குதல். 4. தூளாக்குதல். 5. மதித்தல். 6. ஆற்றுநீர். 7. குடிநீர். 8 சுரபாதிகள். 9. நெய் வகை இவைகளின் அளவு காண்டல். 10. கற்க மருந்துகளின் தொகையித்தனையென்றறுத்தல். 11 அவ்வகைளைப் பொடிசெய்தல். 12. பின்பு நிறுத்துப்பார்க்குதல். 14. இதைக் குடிநீரிற் கரைக்குதல். 15 அப்பாண்டத்தை அடுப்பின்மிசை பொருந்த வைத்தல். 16. எரிக்குதல். 17. துழாவுதல். 18. வாத முதலியவியாதிகளுக்கு வேண்டிய பக்குவ பாகத்தை விரும்புதல். 19. வடிக்குதல். 20. சுத்தி என்னுந்தானியப் புடமிடுதல். 21. பத்திரப்படுத்துதல். 22. கருமசாந்தி செய்யுதல் என்னும இவ்விருபத்திரண்டுவிதச் செய்கையும் பிசகாது செய்து முடிக்கில் தைலமாம்.

தண்ணீர்—எரு—காவல் முதலியவற்ருல் தவறுதலில்லாத பயிரானது செழுமையோடு வளர்ந்து தன்னை விளைத்தவனுடைய மனங்களிக்கப் பயனையுங் கொடுத்து உலகத்தையும் இரக்ஷிப்பதுபோல், மேற்சொன்ன 22 விதச் செய்கைகளையுடைய தைலமானது பரிமளத்தோடு வீரியத்தையடைந்து தன்னை விளைவித்த பண்டிதர் மனதைக் களிப்பிப்பதுமன்றி பிணியை யொழித்து உலகத்தவரையும் இரக்ஷிக்கும்.

ஆயுள்வேதியருக்கு மருந்து முடிக்கு முன்னும் முடித்த பின்னும் எடைபோட்டு அளவு காண்பது அத்யாவசியமானது. இதனை தேரையர் "திராவக வைப்பு திராசு நிறுப்பு" எனக் கூறிப்போந்தனர். ஒரு சிற்பி தன்னுடை கைப் பழக்கத்தினுலே செய்யும் வேலையைப்போல் சித்த வைத்தியத்தின் கைபாகம் செய்பாகம் உடையவர்களுக்கே மருந்து சித்திக்கும். இதனை இவர் "சிற்பர் தொழில் கைமுறைபோல் சித்தொழின்மை பெருந்தொழின்மை" என்றனர். சிந்தூர பக்குவத்தில் அவர் கூறிய கீழ்க்கண்ட வரிகளை நம்மவர் மனதிற் பதிப்பது பெருங்கடமையாகும். அதாவது "சிதைத்திடுதல், அறைத்திடுதல், சிமிழ்த்திடுதல், புடமான சிகிக்கிடுதல் இவை நான்கும் சிறப்பிடுதல் தப்பாமல் சிறைத்திடுதற் சிந்தூரம் சிவப்பிடுமாரிவைமாதோ".

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்தில் தன்பேரமைத்து கடைக்காப்புச் சொல்லுதல்போல இவரும் 'தேறனுரைத்த வாகடமே தேர்ந்ததென்று தானுணரே" என்பது போன்ற பல வாக்கியங்கள் அமைப்பதை நூல்களில் பரக்கக்காணலாம். இதுவன்றியும் தமக்குள்ள ஆந்திர பாஷை அபிமானத்தால் "தெலுங்கு முதன்மொழி தெய்வ நற்பாஷை" எனவும் கூறியுள்ளனர். இவர் வடமொழி ஆயுள்வேத நூல்களை சாங்கோ

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க.)



# வைத்திய போர்டு.

—o—

கடந்த இருபது ஆண்டுகளாய் சென்னை கீழ்ப்பாக்கத்தில் இனிது நடைபெற்றுவரும் இந்திய வைத்திய பாடசாலையைப்பற்றி தென்னிந்தியாவில் நல்ல பெயர் ஏற்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டு இந்திய மெடிக்கல் போர்டு செய்துவரும் முக்கிய வேலைகளையும் நம்மவர் நன்கு பாராட்டி வருகின்றனர். இந்தப் போர்டில் அங்கம் வகித்து வருபவர்கள் நியாயமாக அந்த ஸ்தானத்தைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டுமாயின், இந்திய வைத்தியர்களின் ஒத்துழைப்பையும் தொடர்பையும் பெற்றிருக்கவேண்டும். உண்மையான தேர்தல் மூலியமாய் அந்த ஸ்தானத்தை அடைபவர்களாய் இருந்தால் போர்டு பூராவும் அதிக பலம் பெற்றுச் சுதேச வைத்தியத்திற்கு எதிராகத் தோன்றும் சகல தடைகளையும் நிவர்த்தி செய்துகொண்டு தனது காரியத்தில் பெருவாரியாக வெற்றியடையக்கூடும். அரசியல் ஸ்தாபனங்களில் கௌரவ அங்கம் வகிப்பவர்கள் ஜனசக்தியைப் பெற்றிருந்தால்தான் எடுத்த கருமத்தை இனிது முடிக்கக் கூடுமென்பது சரித்திர பூர்வமான அனுபவம். இதுவரையில் நமது போர்டு மெம்பர்கள் நாட்டு வைத்தியர்களின் அமோகமான ஆதரவுடன் மேற்படி ஸ்தானத்தை வகித்து வந்தார்களென்று சொல்லுவதற்கு ஆதாரமில்லை. காலதேச வர்த்தமானம் நமது வைத்தியர்களை ஒன்றுகூட்டி அவர்களது சமஷ்டி அபிப்பிராயத்தை அறிவதற்கில்லாமல் செய்துவிட்டதென்று தர்க்கரீதியாகப் பொருந்தவைத்த போதிலும், உண்மையை ஆராயுமிடத்தில் மேற்படி போர்டு மெம்பர்கள் தம் முழு நேரத்தையும் இதற்காகச் செலவழித்துச் சரியானவேலை செய்யவில்லை என்று ஏற்படும். நமது உதவி ஆசிரியர் திரு. G. கண்ணுசாமி பிள்ளை அவர்கள் சிரந்தரமாக நோய்வாய்ப்பட்டிருந்தும் தஞ்சை ஜில்லா சம்பந்தப்பட்ட மட்டில் நல்ல வேலை செய்திருக்கிறார்களென்று சொல்லலாம். 3½ கோடிக்கு அதிகமான தமிழ் மக்கள் நிறைந்த விசாலமான பூமியில் 30,000 தமிழ் வைத்தியர்கள் தொழில் நடத்தி வருகிறார்கள். இது குற்றமதிப்புக் கணக்கு. சென்ஸஸ் கணக்குப்படிப் பார்த்தால் இன்னும் ஜாஸ்தியாக இருக்கலாம். ஆயிரக்கணக்கான வைத்தியர்கள் நிறைந்த சித்தாயுர்வேத யூனானி யுலகிற்கு, காரைக்குடி, மதுரை, சேலம், தஞ்சை, சென்னை முதலிய ஜில்லாக்களில் குறிப்பிட்ட ஒரு சில சங்கங்கள், பெயரளவில் ஆடிக்கொண்டிருந்தால் திருப்தியடைந்துவிட முடியுமா? மெடிக்கல் போர்டு, இவர்களுடைய தொடர்பை இழந்துவிட்டு எப்படி சக்தி வாய்ந்ததாய் இருக்கமுடியும்? வலிமையற்ற போர்டில் அங்கம் வகிப்பதால் ரயில் செலவைத் தவிர இதர பிரயோஜனங்களுக்குச் சல்லடை போட்டுச் சலிக்கவேண்டும். சமுத்திரம்போல வைத்தியர்களின் பின்பலம் அதோ கேட்பாரற்றுத் திறந்த வெளியில் கிடக்கிறது. அதை விட்டுக் கருந்திரைக்குள் ஒரு சில மணிநேரம் ஒளிந்திருந்து ‘எங்காத்துக் காரரும் கச்சேரிக்குப் போய்வருகிறார்’ என்பதற்கிசைய சென்னையிலிருந்து ஜோராகத் திரும்பிவருவதில் என்ன பயன் என்று கேட்கிறோம். இந்தத் தினுசில் போர்டு மெம்பர்கள் நடந்துவந்ததால் நமது வைத்தியம் எதிர்பார்த்த அளவுக்கு உயரமுடியாமற்போனதுடன், சென்ற வருடத்தில் வைத்திய பாடசாலைக்கே பெரிய கண்டத்தையும் விளைவித்துவிட்டது. அந்தக் கண்டத்திலிருந்து இன்னும் முற்றிலும் தப்பித்துக் கொண்டதாய்ச் சொல்ல முடியாது. நம்முடைய காரியத்தில் வெற்றியடைய நமது வைத்தியர்களை ஒன்றுசேர்த்து நேரான வழியில் பிரயோசனப்படுத்திக் கொள்ள வேண்டும். திட்டம் போட்டுக் கொண்டு பின்வாங்கும் சேனைத் தலைவர்களுடைய மனோ விசித்திரம்போல நம்முடைய மனத்திற்கு விசித்திரம் செய்யவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?

இனி, போர்டு மெம்பர்கள் தமிழ் வைத்தியத்தின் உண்மையான பிரதிநிதிகளாய்ப் பிரகாசிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதற்கு, வைத்திய மகாநாடுகளிலும் பொதுக் கூட்டங்களிலும் நிகழ்த்தப்படும் தீர்மானங்களை போர்டு மெம்பர்கள் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். போர்டில் தீர்மானிக்கப்படும் விஷயங்களை இந்திய வைத்தியர்களுக்கு விளக்கி வைக்கவேண்டும்.

அகத்தியன் ஆண்டுவிழாக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களை மற்றொரு பக்கத்தில் பிரசுரம் செய்திருக்கிறோம். சகல வைத்தியர்களும் சிறப்பாக போர்டு மெம்பர்கள் அவைவரும் ஊன்றிக் கவனித்து காய்தல் உவத்தலின்றிக் காரியங்களை நடத்த வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

1942-ம் வருஷ முடிவுக்குள் ஒழுங்காகவும் நீடித்தும் நடைபெறக் கூடிய ஜில்லா சங்கங்களையாவது ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்படுத்த வேண்டுவது மெம்பர்களின் முக்கிய கடமை. ஜில்லாச் சங்கங்கள் ஒழுங்குற வேலை செய்ய ஆரம்பித்தால் தாலுகா சங்கங்கள் மளமளவென்று ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டுவிடும். இவ்விஷயத்தில் மாகாண சித்தவைத்திய சங்கமும், பிரபல வைத்திய பூபதிகளும் கவனம் செலுத்தி வேலை செய்தால் மேற்கண்ட திட்டம் வெகு சுலபமாக நிறைவேறும். தமிழ் வைத்திய சங்கங்கள்தான் போர்டு மெம்பர்களின் சக்திக்கு ஜீவன் என்பதை எல்லோரும் உணரவேண்டும்!

காங்கிரஸ் மகாசபை ஜனங்களின் பின்பலத்தை மிதமிஞ்சிப் பெற்றிருந்தபடியால் காங்கிரஸ் மந்திரிசபை கம்பீரமாகச் சகல காரியங்களையும் நடத்தி வைக்க முடிந்தது. அதைப்போல, சித்தாயுர்வேத யூனானி வைத்தியர்களின் பலத்தை ஸ்தாபனரீதியாகப் பயன்படுத்திக் கொண்டால் இந்திய மெடிக்கல் போர்டு வெகு எளிதாகவும் சீக்கிரமாகவும் தைரியமாகவும் சுதேச வைத்தியத்தின் கௌரவத்தை உயர்த்திக் கொள்ளலாம்.

# மந்திர சக்தி.

பிரான்ஸ் ஹார்ட்மன், M.D., அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியது

(நா. ந. பா. மொழிபெயர்ப்பு.)

உலகத்தின் சமஷ்டி ஜீவசக்தியைத் தன்னுள் அடக்கியாளுந் திறமையைமனிதன் அடைந்துவிடுவானேயானால் தனது ஆக்கையைத் தான் விரும்புகிறவரையில் நீடித்து வாழச் செய்துகொள்ள முடியும். பிரகிருதியின் தோற்ற ஒடுக்சு விதிகளை நன்கறிந்து தனது ஏவலுக்குள் அடங்கச் செய்துகொண்டால் அணுப் பொருளை ஸ்தூலப் பொருளாகவும், ஸ்தூலப் பொருளை அணுப் பொருளாகவும் மாற்றிக்கொள்ள ஏலுகிறது. கடலைக் கடுகிற்குள் அடக்கவும், கடுகை கடலைப் போல் பெரிதாக்கவும் கூடும்.

கட்டுக்கதைகளும் கற்பனை விஷயங்களும் நம்மை ஆச்சரியப்படுத்துகிறதாக நினைக்கிறோம். இயற்கையின் உண்மைப் பொருளைக் காட்டிலும் மற்றவைகள் ஆச்சரியப்படத் தக்கவையல்லவென்பது உய்த்துணருவோருக்குப் புலப்படாமற் போகாது. குப்பைக்குழிக்குள் அகப்பட்ட வைரக்கல்லின் ஜாவல்யமான பிரகாசம் எப்படி மறைந்து போகிறதோ, அவ்விதம் குறுகிய சிந்தனையும் அற்ப குணமும் ஆகிய திரைக்குள் மறைந்த கிடக்கும் அறிவின் ஒளியும் குன்றிப் போகிறது. அவற்றிலிருந்து மீண்டு வரும்போது இயற்கையில் மறைந்துகிடக்கும் அற்புதங்களையெல்லாம் நாம் உய்த்துணரக் கூடுகிறது. அநேக அற்புதங்கள் இயற்கையில் தினந்தினம் நிகழ்ந்து வந்தும் சில நேரங்களில் மட்டும் அவற்றின் இயல்பைக் கண்டு ஆச்சரியமடைகிறோம். அவற்றைப்பற்றி நாம் நன்றாகத் தெரிந்துகொள்கிறவரையில், அவை நமக்கு ஆச்சரியமாகத் தென்படுவது கஷ்டம். மோட்டார்கார் தினசரி ஓடுகிறது; ஆகாயவிமானம் ஒவ்வொருநாளும் பறந்து செல்கிறது ரேடியோவில். தினசரி சங்கீதம் கேட்கிறோம். ஆதலின், அவற்றின் இயல்பு நமக்கு ஆச்சரியமளிப்பதில்லை. ஆனால், அவற்றின் காரணத்தையும் காரியத்தையும் ஆராய்ந்து சிந்தித்துப் பார்க்கும்போது அவ்வியற்கைச் சக்தியை நாம் வியந்து புகழாமலிருக்க முடியாது. இதைப்போலவே இயற்கையோடு சர்வ சாதாரணமாய்ப் பழகிக்கொண்டிருக்கும் நாம் அதனை ஆராய்ந்து சிந்தனை செய்யாதபோது நமக்கு அந்த இயற்கைச் சக்தி ஆச்சரியந் தருவதில்லை. இயற்கையின் தன்மையை ஊன்றி ஆராய்ந்து பார்க்குமளவில் நமது ஹிருதயத்தில் குபுகுபுவென்று இன்பம் ஊறும்; ஆச்சரியமும் ஆனந்தப் பாவசமும் உண்டாகும். விதையினால் மரம் உற்பத்தியாகிறதென்னும் அனுபவ ஞானமில்லாத ஒருவனிடம், ஒரு சிறு விதையைக்காட்டி அச்சிறு விதையிலிருந்துதான் பிர்மாண்டமான ஆலமரம் உற்பத்தி யாகிறதென்று சொன்னால் அவன் மனதில் நம்பிக்கையுண்டாகுமா? சிறு வித்துக்குள் அத்தனை பெரிய ஆலமரம் அடங்கியிருப்பதாவது போவதாவது என்று அவன் நமக்கு முட்டாள் பட்டம் கட்டிவிட்டுத் தான் முட்டாளாய் இருப்பதையறிந்துகொள்ளாத பிச்சுவாயிருப்பான். ரோஜா செடியில் அழகான புஷ்பங்கள் விளையும் என்பதை காக்ஷிப் பிரமாணமாய் அறியாதவன் அச்செடியில் பூ உண்டாகும் என்ற வார்த்தையில் நம்பிக்கை வைக்கமாட்டான்.

எங்கு பார்க்கினும் இயற்கையின் விதிப்பிரகாரம் யாவும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த இயற்கையின் விதியை மட்டிலும் ஒருவரும் உணருவதற்கில்லை. ஒருவனுடைய புதகி சாதுர்யத்தின் விளைவை சிற்பத்திலும் சித்திரத்திலும் எங்கும் கண்டு மகிழலாம். ஆனால், புத்திசாதுர்யத்தின் அடிப்படை யாதென்று அவன் மூளையைக் கிண்டிக் கிளறிக் கண்டுபிடிக்க முடியுமா? ரோஜா மலரை அதன் செடியின்மீது கண்டு ஆனந்திக்கலாம். அந்த மலர் செடியின் உட்புறத்தில் எங்கே ஒளிந்திருந்து வெளிவந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா?

காணப்படும் ஸ்தூலப் பொருளிலிருந்து காணப்படாத சூக்ஷ்ம ஆன்ம தத்துவங் (Invisible spritual agencies) களைப்பிரயோகம் செய்யத் தெரிந்துகொள்ளும் வித்தையே மந்திர சக்தி என்பது. உச்சாடணங்களையும் சில ரகசியக் கிரியைகளையும் உபயோகிக்கத் தெரிந்தவனிடத்தில், மேற்படி சூக்ஷ்ம தத்துவங்கள் விரைந்தோடி வந்து அவன் ஆக்ஞையை நிறைவேற்றச் சித்தமாயிருக்கின்றன அவை காணப்படாதவற்றில் அடங்கியிருந்தபோதிலும் மனக்கிளர்ச்சியின் வியாபக சக்தியாகவும் இச்சையின் சர்வ சக்தியாகவும், உணர்ச்சி ஆர்வம் சிந்தனை மனோபாவனை, விருப்பு வெறுப்பு, நம்பிக்கை அவநம்பிக்கை, பயம் தைரியம் முதலிய குணங்களின் அனந்த சக்தியாகவும் விளங்குகின்றன. 'ஆன்மா' என்று எது கொள்ளப்படுகிறதோ அதற்கு உரிய சக்திகள்தான் மேற்சொல்லிய சக்திகள் என்று உணர்க! அச்சக்திகளை ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் தெரிந்தோ தெரியாமலோ, இஷ்டத்துடனே இஷ்டமில்லாமலோ, உபயோகித்து வருகிறார்கள். (இன்னும் வரும்.)


## சந்தா விகிதம்.

| | |
|---|---|
| ஆயுள் சந்தா | ரூ. 25—0—0 |
| உள்நாடு ஒரு வருடம் | 1—0—0 |
| வெளிநாடு ஒரு வருடம் | 2—0—0 |
| தனிப்பிரதி | 0—1—6 |

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| வெளியட்டை (ஒரு தடவை) | | ரூ. 25—0—0 |
| உள் அட்டை | ,, | 20—0—0 |
| அரைப் பக்கம் | ,, | 10—0—0 |
| கால் பக்கம் | ,, | 5—0—0 |

தொடர்ந்து விளம்பரஞ் செய்ய விரும்புவோர்களுக்குத் தனி விகிதம் விபரம் தரப்படும்.



## ஏஜண்டுகள் தேவை.

—oOo—

எல்லா இடங்களிலும் அகஸ்தியனை விற்பனை செய்வதற்கு ஏஜண்டுகள் தேவை! தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்! விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

அகஸ்தியன் ஆபீஸ்,

திருத்துறைப்பூண்டி P. O.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

## தேரையர்.

பாங்கமாகக் கற்றுணர்ந்து அவற்றின் கருத்துக்களை தமிழில் வெளிப்படுத்தியுள்ளார். இதனை வடமொழி சுலோகமும் அவருடைய தமிழ்ப் பாடலையும் ஒப்ப நோக்கி பார்த்தால் தெள்ளிதின் விளக்கமாகும். அப்பகுதிகளை நமது அகத்தியன் பத்திரிகையில் வெளியிடச் சித்தமாயிருக்கிறேன்.

கரிசலில் "கோரக்கர் முதலினோர் கோடியதிஃதே" எனவும், 'சித்த வித்யாதரம்' 'வித்தியநாதீயம்' 'சித்த சாரணம்' முதலிய வடமொழி வைத்திய நூற்களின் கருத்து இது என்று நீர்நிறக்குறி சாஸ்திரத்தில் அவர் கூறிய அகச்சான்றே போதுமானது. ஐவகை இலக்கணமும் அடங்கக் கற்றுப் பல்காப்பியங்களின் நுட்பமுமாய்ந்த செந்தமிழ் அறிவாளர்களுக்கே இவருடைய நூல்கள் நயம் தெரியும். பொன்னுங்காணி எனும் பச்சிலையை ஒருவன் கற்ப முறைப்படி உட்கொண்டுவந்தால் என்னாகும் என்று எவரையும் கேட்க வேண்டியதில்லை. 'பொன்—ஆம்—காண்—நீ' என்று அந்த மூலிகையின் பெயரே விளக்கும். காந்தச் செந்தூரம் எந்த சரீரத்திற்கும் ஒக்கும் என்னும் கருத்தை இவர் யமக வெண்பாவில் "எவர்க்குமே காந்தமினிது" என்றார். "எவர்க்கும் ஏகாந்த மினிது" என்று சந்திபிரித்து 'ஏகாந்தம் இனிது' என்று நயப்பொருள்கொள்வது மொன்று.

துவர்ப்பு மலத்தைக் கட்டுந்தன்மையதானாலும் அதிக துவர்ப்பு மலத்தைப் போக்குந் தன்மையுடையதாயிருக்கிறது. கடுக்காய் ஒரு அளவில் மலத்தைக் கட்டவும் வேறொரு அளவில் மலத்தைப் போக்கவும் பிரயோகப் படுத்தலாம். ஆதலினாலே ஒருசரக்கினிடத்தே சத்ரு குணமும் மித்ரு குணமும் அமைந்து கிடக்கிறது. இதனையே ஆலோபதி சத்ரு வைத்யமெனவும் ஹோமோபதி மித்ருவைத்யமெனவும் வழங்கி வருகின்றது. இக்கருத்தை நமது தேரையர் காந்த சிந்தூர குணத்தில், "இரும்பினுங் காந்த மேன்மை" என்னுஞ் செய்யுளில் உரை செய்திருக்கிறார்.

"மந்திரங்கால் மதிமுக்கால்" என்பதை "மாத்திரங்கால் மதிமுக்கால்" என்று உடலினும் உணர்ச்சி பெரிதென்னும் பொருள் கொண்டார். சைவசமயாசாரிகளின் நூற்களில் இவர் நன்கு பயின்றிருப்பதற்குச் சான்றுகள் பலவுண்டு. கரிசல் 2வது பாட்டு, 19, 20, 21வது அடிகளைக் காண்க.

இன்னும் இவரைப்பற்றிச் சொல்லப்புகின் விரியும். வைத்தியர்களுக்கு தெய்வ வழிபாடு அவசியமென்று வற்புறுத்தியிருக்கிறார். மருந்தின் மூலியமாய் நரை திரை நீங்கிக் கற்ப காலம் வாழலாம் என்பதை நெய்க்குறி சாத்திரத்தில் வற்புறுத்தியுள்ளார்.

"தேரன் வாக்குத் திசையெட்டும் பொய்யாது." என்றும், "புத்தகம் சுட்டுப்போடு நாள் தேரனுமல்லவே" என்னும் உண்மை காட்டி வைத்தியம் கூறவந்த தேரையரின் நூற்கள் இருக்குமிடந்தேடிப் பாதுகாத்தல் நம் கடமையாகும்.

# கொடி வணக்கம்.

**துடிசைக்கிழார் அ. சிதம்பர முதலியார் அவர்கள்.**

(1—2—42ல் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்)

தமிழ்நாட்டில் பண்டைக்காலந் தொட்டு ஒவ்வொரு குழுவார் ஒவ்வொரு கொடியை உரிமையாக்கிக் கொண்டு, காரியத் தொடக்கம் ஒவ்வொன்றிலும் ஏற்றுவித்து, காரிய சித்தி பெற்று வந்திருக்கிறார்கள்.

அவரவர்கள் கொடி பறப்பதற்கு கொடிமரம் (அரசோ, வேம்போ, கடம்போ, வன்னியோ, இலந்தையோ) வளர்த்து வந்திருக்கிறார்கள். அக்கொடிமரத்தை உயிரினும் சிறக்கப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்.

உயிருள்ள பச்சைக் கொடிமரம் இல்லாதபோழ்து கோடிக் கம்பம் நட்டு அதிலும் கொடியைக் கட்டுவதுண்டு.

பழங்காலத்தில் அரசர்கள் ஒருவருக்கொருவர் பகைத்துச் சண்டையிடும்போது, எவனொருவன் தன் கொடியைப் பிறன் கொடிமரத்தில் ஏற்றுகிறானோ அவனே வென்றவன் ஆவான் என்னும் கொள்கை உண்டென்பதையும் புறநானூற்றில் பழயன் என்பவன் வரலாற்றில் காணலாம்.

தமிழ்நாட்டில் பாண்டியருக்கு மீனக் கொடியும், சோழருக்குப் புலிக் கொடியும், சேரர்க்கு விற்கொடியும், ஒளிநாட்டார்க்கு ஏற்றுக் கொடியும், உரித்தானவைபோல, சித்தர் இயக்கத்திற்கு பிரணவக்கோடி உரிமை உடையது.

இன்னும் கோழிக்கொடி, குயிற் கொடி, பன்றிக்கொடி, அரவக்கொடி, அநுமக் கொடி, கலப்பைக் கொடி, அன்னக்கொடி, கருடக்கொடி முதலிய பல கொடிகளை உடையவரும் இருந்திருக்கிறார்கள். தற்காலம் இராட்டைக் கோடி, கழுகுக் கோடி, சிம்மக்கோடி முதலியவற்றைக் காண்கின்றோம்.

மேலே கூறிய கொடியானது அவ்வக்குழுவார்க்கு மிகுந்த சத்தியையும் ஆவேசத்தையும் கொடுக்கிறது. குண்டலினி சத்தியானது வீணாதண்டு ஊடே ஏறுவதனை ஒப்ப, கொடியானது கொடிமரத்தில் ஏறுகின்றது.

நம் வித்தகச் சித்தர்கள் பிரணவக் கோடியை தங்களுக்கு உரிமைப் படுத்திக் கொண்டதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. பிரணவந்தான் படைப்பில் முதலாவது. பிரணவத்தினின்றுமே அண்டங்களும், பிண்டங்களும், எல்லா மொழிகளும் உண்டாயின என்ற தங்கொள்கையை உலகிடை நிலை நாட்டியும், அக்கொள்கை பிரணவம்போல் என்றும் அழியாமல் நிற்கவும் பிரணவக்கொடியைக் கைக்கொண்டார்கள்.

நாம் எல்லோரும் இக்கொடியை இன்று ஏற்றுவித்து வணங்குவது எற்றுக்கு எனின், சித்தர்களின் அருள் நமக்கு ஏற்படவும், சித்தர்களின் மருத்துவ முறையே ஆதிமுறை எனக் காட்டவும், அம்முறையே உலகில் நின்று பரவவும், அம்முறைக்கு எவ்வித இடையூறுகள் பிறரால் ஏற்பட்ட போதிலும் பிரணவம்போல சித்தர் முறை என்றும் அழியாநிலை உள்ளது.

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க.)

தொடர் கதை.

# உதயசங்கரன் அல்லது அமராவதி இளவரசன்.

நாகை என். பாலசுப்ரமண்யம்.

பதிப்புரிமை கதாசிரியனுடையது.

(Copyright to the Author of this Novel)

## 2. சம்பூரண சௌந்தரியம்.

உதயசங்கரர் பானுமதியின் சங்கீதத் திறமையைக் கண்டதிலிருந்து அவருக்கு வேறு ஒன்றிலும் மனம் பாவவில்லை. சங்கீதத்தில் அபார ஞானமும் சாதுரியமும் வாய்ந்த அந்தப் பெண்மணியைப் பார்க்கவேண்டுமென்று அவருடைய மனம் துடித்துக்கொண்டிருந்தது. ஆம். பானுமதி அவருக்குப் புதியவள் அல்ல. அவளிடம் கண்ட வித்தையின் முதிர்ச்சியோ முற்றிலும் புதுமை! புதுமை!! புதுமையில் மனித வர்க்கத்துக்கு அடங்கவொண்ணாத ஆசை! நாம் சற்று நீண்டு யோசித்துப் பார்த்தால், புதுமை என்பது காலத்தின் பரதநாட்டியம் என்று தோன்றும். காலப்போக்கில் நிறைந்திருக்கும் சிந்தனைகளும் அறிவின் வளர்ச்சியும் அதற்குத் தகுந்த செயல்களும் மாறுபாடுகளும் எத்தனையென்று மனித புத்தியைக்கொண்டு நிர்ணயம் செய்ய முடியாது. இன்று ஒரு தினசு; நாளைக்கு ஒரு அழகு; அப்புறம் ஒரு சௌந்தரியம்; இவைகளைத்தான் கால தேவதையின் திருவிளையாட்டு என்று சொல்லுகிறார்கள்.

பெண்களின் உருவ அமைப்பு பெண்களையே வசீகரிக்கும் தன்மையுடைய தென்பதை பானுமதியிடம் தத்ரூபமாய்க் காணலாம். மாதர்களின் பாஷைக்கு அவ்வளவு ஆகர்ஷணம் ஏற்படுவதற்குக் காரணம் அவர்களுடைய சாரீரத்தின் இனிமைதான்! அவர்கள் பேச்சில் இயல்பாக சப்தசுரங்களும் துள்ளித் தெறிப்பதால் சங்கீதத்தின் மூர்ச்சை தானே இயக்கங் கொள்கிறது. மனத்தின் அமைதி சொல்லிலும் பிரதிபலிப்பதால், அவர்கள் பாஷை தாளக்கட்டுக்கும் லயமாகிறது. இவையெல்லாம் கவிகளின் உள்ளக்கிளர்ச்சியினால் எழுந்த வெற்றுக் கற்பனை என்று யாருக்காவது தோன்றினால் அபத்தம் அபத்தம்! அவைகளுக்கெல்லாம் இலக்கிய ஸ்திரீயாகப் படைக்கப்பட்டிருக்கும் அந்த பானுமதியைப் பார்க்கட்டும்! அப்பொழுதுமா சந்தேகம்?

பெண் என்பது ஒரு ஜாதி, தனிக்குலம். உலகத்தின் உற்பத்திக்கே முதல் என்றும், சகல ஜாலங்களையும் செய்து பிரமையுண்டாக்கும் மாயை என்றும், வீரவாளுக்கும் வைரநெஞ்சுக்கும் உணர்ச்சி யளிக்கும் மின்சார சக்தியென்றும் பலவாறாகப் புகழப்படும் பெண் குலத்தின் தலைவி பானுமதிதான் என்று தைரியமாகச் சொல்லலாம். இதற்கு அப்பீல் இருக்க முடியாது! அத்தகைய உத்தமப் பெண் கந்தலுங் கிழிசலுமான வஸ்திரத்தை அணிந்துகொண்டு அதற்கு அழகு செய்துகொண்டிருந்தாள். எண்ணெய் இறங்கி மங்கிப்போன வெள்ளைக்கல் தோட்டுக்கு அவளது சுவர்ணமயமான காதுகள் அலங்காரம் செய்து கொண்டிருந்தன. கழுத்திலே, நற்பவளமல்ல, ஒரு சாதாரண பவள ஹாரம் கிடந்து உருண்டு கொண்டிருந்தது. கைகளில் இரண்டு மூன்று மணிக்கடை வளையல்கள் கிடந்து குலுங்கின. அவளுடைய அழகுக்கு நகைகள் தேவையில்லாத போதிலும், நகைகளின் அழகுக்கு அவளது சுந்தர தேகம் அலங்காரம் செய்துகொண்டிருந்தது.

பெரிய ஜமீன்தாருக்கு மைத்துனரும், திரண்ட ஆஸ்தியுடையவரும், ரிட்டயர்டு ஆபீஸருமான தனபால முதலியார் இல்லத்தில் பானுமதி ஏழ்மைத்தனத்துடன் வாழ்வது ஆச்சரியமல்லவா? அவள், அவருடைய குடும்பத்தில் பரம்பரையாக ஊழியம் புரிந்து வரும் வம்மிசத்தைச் சேர்ந்த வேலைக்காரி என்று தெரியவரும்போது அந்த ஆச்சரியம் தானாக மறைந்து போகும். பறையனிடம் பார்ப்பான் அடிமைப்பட்டுக் கிடப்பதைப்போல சம்பூரண சௌந்தரியம் முதலியாரின் குடும்பத்துக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. இருளைப் போக்கும் விளக்கானது விலைகொடுத்தவருக்கு உரிமைப்படுவதைப்போல ஸ்திரீகளுக்கெல்லாம் பிரகாசந்தரும் பானுமகியும் உரிமைப்பட்டிருந்தாள். அவளிடம் பிரியமற்றவர்கள் அந்தக் குடும்பத்தில் யாருமில்லை. அவளைக் காணுபவர்களுக்கு சஞ்சலந் தீர்ந்து இன்பம்பெருகுமாதலின் அவள் தரிசனத்துக்கு யாரும் ஆர்வங்கொண்டிருப்பது வழக்கம். அகம்படியர் க்ஷத்திரிய மரபைச் சேர்ந்தவர் என்றும், சரித்திரப்பிரசிததமான குலம் என்றும் புகழ்வதை நாம் கேட்கிறோம். அவை உண்மையென்பதற்கு அகம்படிய குலத்தில் அவதரித்த பானுமதியின் கம்பீரமான கண்களும் பெண்மை ததும்புகின்ற செந்தாமரை முகமும் போதுமானவை. பானுமதியின் தாய் தந்தையர்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இளம் பருவத்திலிருந்து சுந்தரத்தண்ணி அவளுக்குத் தாயாக விளங்கி வளர்த்து வந்திருக்கிறாள். திலகவதி வேறு பானுயதி வேறு என்று அவளுக்கு விகற்பமிருந்ததில்லை; இருக்கவும் இல்லை; எதிர்காலத்தைப்பற்றி நாம் ஒன்றும் அண்ணாவியல்ல.

மாசு மருவற்ற நிர்மலமான குழந்தை ஹிருதயம் பானுமதியின் வாழ்க்கையைத் தூய்மைப் படுத்தியது. அவளுக்குக் கெடுதி செய்தாலும் நன்மை செய்தாலும் மனத்திலும் முகத்திலும் மாறுதல் காணமுடியாது. மகிழ்ச்சி ஒன்றுமட்டும் அவளைவிட்டு அகலுவதில்லை. தனபால முதலியாரின் புதல்வி திலகவதிக்கு பானுமதி உயிர்த்தோழி. அவளுடன் பேசுவதற்கும் விளையாடுவதற்கும் மட்டற்ற ஆசை. இவர்கள் இருவருக்குமிடையில் யாராலும் பிரிக்கமுடியாத பந்தம் ஏற்பட்டிருந்தது.

அழகிலும் குணத்திலும் இப்படி நிகரற்று விளங்கும் ஸ்திரீரத்னம் அநாதியாக அடிமைப்பட்டுக் கிடப்பதைப் பார்க்கும்போது யாருக்கும் கண் கலங்கும். காலை ஐந்து மணிக்குத் துயில் நீங்கிப் பாத்திரம் பண்டங்களைத் துலக்கி அடுக்கிவைப்பதும், வீட்டு முகப்பிற்குச் சாணந் தெளித்துப் பெருக்கிக் கோலமிடுவதும், வீட்டு வேலைகளை முடித்தபின் சூரியன உதயமாகிற நேரத்தில் வீணையில் சுருதிமீட்டி வீட்டில் வசிக்கும் சகல பேருக்கும் உற்சாகமேற்படும் வண்ணம் இசை பாடுவதும் பானுமதியின் காலைக்கடன்கள். பிறகு எஜமானர், எஜமானிகள் குளிப்பதற்கு ஸ்நானக் கட்டத்தில் தண்ணீர் கொட்டவேண்டும். வெந்நீர் இட்டு விளாவி வைக்க வேண்டும். தோட்டத்தில் வாழையிலைகளும் காய்கறிகளும் பறித்துக் கொண்டுவர வேண்டும். இவை நடுப்கல் வேலைகளாகும். இப்படி முப்பொழுதும் அவளுக்கு வேலைகள் சரியாயிருக்கும். பரிசாரகன் வெளியில் கொண்டுவந்து எறியும் சாப்பாட்டை மனமகிழ்ச்சியுடன் சாப்பிடுவாள். வீட்டுவேலைகள் நீங்கிய இதர காலங்களை அவள் வீணாக்குவதில்லை. இராட்டினத்தில் நூல் நூற்பதும், சிட்டம் சுற்றுவதும் பஞ்சுக்குப்பட்டை போடுவதும் இவ்விதம் காந்தியடிகளின் நிர்மாண வேலைகளைச் செய்துகொண்டிருப்பாள். இவை போன்ற காரியங்களில் திலகவதியும் ஒன்று சேர்ந்து அவளுக்கு ஊக்கமளிப்பாள். திலகவதிக்கும் பானுமதிக்கும் ஒரே ஒரு விஷயத்தில்மட்டும் கொள்கைகள் வித்தியாசப்படும். ஹிந்துக்களின் ஸ்திரீ தர்மத்தைப் பெண்மணிகள் பின்பற்றி நடக்க வேண்டுமென்று பானுமதி சொல்லுவாள். நாகரிக மோகத்தினால் ஏற்பட்டுவரும் ஸ்திரீ சுதந்தரக் கட்சியைப் பேசுவாள் திலகவதி. இந்த விவாதம் இவர்களுக்குள் தீர்ந்து போகாமல் வளர்ந்து கொண்டே போயிற்று.

### 3. அடிமைக்கு அடிமை.

ஆம், கதைப்போக்கில் அவசரப்படுவோருக்கு கதையின் கர்த்தாமீது கொஞ்சம் கோபம் ஏற்படும்படி எழுத நேர்ந்துபோயிற்று. இனிக் கதையின் நிகழ்ச்சியைக் கவனித்து அந்தக் குறைபாட்டைத் தவிர்ப்போம்.

தனபால முதலியாரும் இளவரசரும் வரப்போகிற எலக்ஷன் விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தனர். எலக்ஷனுக்கு எவ்வளவு பணம் செலவாகும்? எப்படி எப்படி யெல்லாம் வேலைசெய்தால் காங்கிரஸ் எதிர்ப்பைத் தகர்த்து வெற்றி பெறலாம்? இதற்கு யார் யாருடைய உபகாரம் தேவை என்பதைப்பற்றி நுணுக்கமாகப் பேசி முடித்தனர். இசற்குள் மணி பதினொன்றரை யாயிற்று. பரிசாரகன் துணியை உதறி உடம்பைத் துவட்டிக் கொண்டு காற்றாட கொல்லை முகப்பில் நிற்கலானான். சுந்தரத்தண்ணி இளவரசரை ஸ்நானத்துக்குச் செல்லும்படி வற்புறுத்தினாள். இளவரசர் 'ரிஸ்டு வாட்சைத்' திருப்பிப் பார்த்துவிட்டுச் சாவகாசமாக எழுந்து ஸ்நானக் கட்டத்துக்குச் சென்றார்.

ஸ்நான அறையில் பானுமதி இடுப்பிலிருந்த குடத்திலிருந்து தொட்டியில் தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தாள். இளவரசரின் காலடிச் சத்தங் கேட்ட பானுமதி முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். முழுச் சந்திரனையுங் கண்டதைப்போல பானுமதியின் சம்பூரண சுந்தர வதனத்தை இளவரசர் கண்டார். ஒரு தாமரையில் இரு செந்தாமரை மலர்ந்ததை யொத்த அவளது இருவிழிகளிலும் இளவரசரின் கண்கள் விழுந்து அலர்ந்தன. கண்கள் கண்களாகத் தோற்றவில்லை. இடையறாது சுரக்கும் இன்பத்தின் ஊற்றுக் கண்கள் என்று அவருக்குத் தோன்றிற்று. மனித ஜென்மத்தில் இவ்வளவு பிரவாகமான ஆனந்த அனுபவமும் சாத்தியமா என்று அவருக்கு ஆச்சரியம்! காக்ஷியில் இப்படியும் ஒரு காக்ஷியுண்டா என்று அவருக்கு ஐயப்பாடு. 'ஐந்து நிமிஷம் மனம் தொழிலற்று நின்றது. பானுமதி பிரக்ஞையழிந்து நாணம் நெகிழ்ந்தவளாய் இளவரசரின் கண்களின் கவ்வுதலுக்குத் தன் செவ்வரி படர்ந்த இரு விழிகளையும் பறிகொடுத்துப் பரிதவித்து நின்றாள். அவரது அன்பு நிறைந்த பார்வையிலிருந்து அவளை மீட்க அவளது வெட்கம் வெகுபாடுபட்டது. அந்த பந்தம் கொஞ்சம் கட்டவிழ்ந்ததும் பானுமதியின் உடம்பு குன்னி பெண்மை மேலோங்கி நடுங்கினாள். சரசரவென்று நீரைக் கொட்டிவிட்டு அவ்விடத்தை யகன்று மின்னல் மறைவதைப்போல ஓடி மறைந்தாள். அவள் அப்படி மறைந்துவிட்டது அவருக்கு வருத்தமளிப்பதாய் இருந்தாலும் காணாமற்போன தன் மனது திரும்பக் கிடைத்துச் சிந்திப்பதற்குச் சாவகாசம் பெற்றதில் கொஞ்சம் திருப்திதான். சற்றுமுன் நிகழ்ந்தவை பொய்யா மெய்யா என்ற சந்தேகம் அந்த மனதின்கூடவே ஒன்றாய் எழுந்தது.

“ஹா! என்ன ஆச்சரியம்! நான் இந்த சொற்ப நேரத்தை எங்கே கழித்தேன்; சுவர்க்கம் என்பது நான் சின்னேரத்துக்குமுன் அடைந்திருந்த இடமோ? பொறாமையும் கோபமும் எரிச்சலும் ஏக்கமும் துக்கமும் துயரமும் நிறைந்து விளங்கும் இந்தப் பூமண்டலத்தில் அந்தப்பாவையைப் பார்க்க முடியுமா? சே! என்ன மதியீனம்! சுவர்க்கத்துக்குப் போகவாவது வராவது? என்ன பைத்தியமா எனக்கு?” என்று அவர் நெஞ்சில் ஒரு புதவாணம் உயிரக் கிளம்பி பல வன்னங்களுடன் புலபுல வென்று கீழே உதிர்ந்தது. இச்சமயத்தில் அகஸ்மாத்தாக அந்தப்பக்கம் வந்த சுந்தரத்தண்ணி தனது மருமகன் மலைத்துப் போய் ஒரு மாதிரியாய் நிற்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, “தம்பீ! ஏன் நிற்கிறாய்! முகம் திடீரென்று இப்படி வாடியிருப்பதற்கு என்ன காரணம்? ஸ்நானம் செய்யவில்லையா? உடம்புக்கு ஏதாவது சரியில்லையா?” என்று கொஞ்சம் பதறலாய்க் கேட்டாள். இந்தக் கேள்வி இளவரசருக்கு அவமானகரமாய் இருந்தது.

“இல்லை ..... இல் . லை” என்று அவர் இழுத்துக் கொண்டே போனார். என்ன சொல்லுகிறார், என்ன சொல்லலாம், என்ன சொல்ல வேண்டும் என்பது அவருக்கு ஒன்றும் மட்டுப் படவில்லை

“தலையை வலிக்கிறதா?”

“உடம்பு நோகிறதா?”

“காரில் வந்தது களைப்பாய் இருக்கிறதா?”

“அனற்றுகிறதா?” என்று சுந்தரத்தண்ணி வரிசையாய்க் கேள்வி போட்டுக் கொண்டு போனாள். எதற்குப் பதில் சொல்வதென்று இளவரசர் யோசித்துக்கொண்டு நின்றார்.

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

(9-வது பக்கத் தொடர்ச்சி)

"என்ன யோஜனை?"

"குளிக்க வேண்டாமென்று தோன்றினால் குளிக்கவேண்டாமே! நானைக்குப் பார்த்துக் கொள்கிறது!" என்று சுந்தரத்தண்ணி யோசனை சொல்ல ஆரம்பித்தாள்.

அந்தப் பெண்பிம்பம் தன்னைப் பைத்தியமாக அடித்துவிட்டதென்று அவர் எண்ணினார். ஏதும் செய்ய முடியாமலும் பேச முடியாமலும் சிந்தனை செய்யக்கூட முடியாமலும் அசக்தனாக்கிவிட்ட அந்த கௌமார சக்தி யார்? என்று அவர் ஆலோசனை செய்தார். அவள் விஷயமாகவே கவனத்தை விட்டுவிட்டால் எதிரே நின்று சரமாரியாகக் கேள்வி கேட்கும் அத்தைப் பிசாசுக்கு யார் பதில் சொல்வது? "இந்தப் பிணம் ஏன் இங்கு வந்து எனது சிந்தனைகளைக் கலைக்கிறது. அந்த மின்னற்கொடியை நினைத்துப் பார்ப்பது எவ்வளவு ஆனந்தமாய் இருக்கிறது!'' என்று உதய சங்கரர் உள்ளுக்குள் சொல்லிக் கொண்டார். பானுமதியைத் தவிர இதர விஷயங்களில் மனத்தை செலுத்துவது அவருக்கு சித்திரவதையாய் இருந்தது.

"அத்தை எனக்கு! ஒன்றும் பிரமாதமாய் வந்துவிடவில்லை! நீ உன்வேலையைப் பார்! நான் குளித்துவிட்டு வருகிறேன்" என்று கொஞ்சம் எரிச்சலாய் பதிலளித்தார் உதயசங்கரர். சுந்தரத்திற்கு அதைக்கேட்டதும் வெட்கமாயும் பயமாயுமிருந்தது. "நான் ஒன்றும் சொல்லவில்லையே அப்பா! சுணக்கமாய் நின்றதினால் உடம்புக்கு சுகமில்லையோ என்று எண்ணினேன்" என்று சாந்தமாகச் சேதியைச் சொல்லித் திரும்பிப் போய்விட்டாள்.

உதயசங்கரர் அமராவதி எஸ்டேட்டின் அதிபதி; ஆயிரக்கணக்கான ஊழியர்களைக் கொண்ட பெரிய பிரபு. பானுமதியோ, தாய் தந்தை பந்துக்களற்ற அநாதி; பகல் முழுவதும் உழைத்து ஒருசாண் வயிற்றைக் கழுவவேண்டிய பரம ஏழை. தனபால முதலியாரின் குடும்பத்துக்கு சாஸ்வதமான அடிமை. அவளை மணக்க உடன்படக் கூடியவனும் அதே குடும்பத்துக்கு அடிமையாக வேண்டிய நிலைமையைப் பெற்றவள்! அஷ்ட ஐஸ்வரியங்களையும் பெற்ற உதயசங்கர முதலியார் இன்று அவள் ஏவியதை யெல்லாம் இயற்றிவைக்கும் அடிமையானார். அதைக் கொண்டு தான் அடிமைக்கு அடிமை என்று அவரைக் கூசாமல், சொல்லும்படி ஆயிற்று. காதல் உயர்வு தாழ்வற்ற சமநிறை கொண்டதன்றோ? அவள் காதலைப் பெறுவதற்குத் திரிலோகத்தையும் விலையாகக் கொடுத்தாலும் அவருக்குத் திருப்தியாகாதென்றால் அவருடைய ஆஸ்தி எப்படி போதுமானதாகும்?

---

# சித்த வைத்தியத்தின் வலிமை.

டாக்டர் N. சுப்பிரமணியம், L. I. M.
(மெம்பர், சென்னை இந்திய வைத்திய சென்ட்ரல் போர்டு.)

அகத்தியன் முதலாவது ஆண்டுவிழாவை முன்னிட்டு எழுதியது.

சித்த வைத்தியத்தின் வலிமை என்பது சித்தர்கள் வாயிலாக சிவபெருமானால் அருளப் பெற்ற வைத்திய முறையின் வலிமை என விரியும். உலகில் உள்ள சகல சீவராசிகளும் எந்தப் பருவத்திலும் நிலைபெற்றுத் தன்னுடலுடன் நீண்டகாலம் வாழ்ந்து ஊக்கக் குறைவின்றி இருக்கும்படி "உடற்பிணி நீக்க முறையான" ஆயுள் மறையை முதல்வன் நந்தி மூலம் உதவினான்.

(1) சித்தர் (2) வைத்தியம் (3) வலிமை என்பவற்றைத் தனித்தனி விளக்கி சித்தர் வலிமை, வைத்தியவலிமை, சித்தவைத்தியம் எனப் பகுத்துக் கொண்டு சித்தவைத்தியத்தின் வலிமையைத் தொகுத்துக் கூறுவது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

(1) **சித்தர்கள்:—** சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்ற நான்கு அறிவர் கல்லாலின் கீழிருந்து சிவபெருமானிடம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய தமிழ் நான் மறைகளைக் கேட்டனர். சந்தேகந் தெளியாதமென்மேலுங் கேள்விகள் கேட்டதால் இறைவன் சின்முத்திரை என்ற திருக்குறிப்பினால் நான்மறையின் உட்பொருளை விளங்க வைத்தார். அறிவர் எனினும் சித்தர் எனினும் ஒன்று. திருமூலர் இவர்களை ''நந்திகணால்வர்'' என்று கூறுகிறார்.

ஆயுள் மறை, சனந்தனர் என்ற நந்தி சிறப்பாகக் கற்ற, பொருள் என்ற மறையில் அடங்கும்.

வேதம் அறிவுநூல்; இலக்கணம் போன்றது; பொதுவானது; போது போன்றது. அதாவது வெடிக்காத மொக்குப் போன்றது. விரிந்த அறிவினர்க்கே விளங்குவது. திருக்குறிப்பால் விளக்கிய இறைவன் அதை ஆகமம் என்ற அன்பு நூலாக—இலக்கியமாக—சிறப்புநூலாக போதவிழ்ந்த மலராக மகேந்திர மலையினின்றும் அகத்தியரையும் உள்ளிட்ட-ஐவருக்கு அருளினான். ஆ = உயிர்(பசு). க = கடவுள்(பதி). ம = மலம்(பாசம்).

நான்மறை நான்கு, ஆகமம் ஒன்று ஆக வேதங்கள் ஐந்தும்; திருவள்ளுவர் முப்பால்; சனற்குமாரர் வழிவந்த மெய்கண்டார் அருளிய சிவஞான போதம் ஆகியவற்றில் நமக்குக் கிடைக்கின்றன.

நந்தி, அகத்தியர், இவர் மாணாக்கர் மரபில் வந்தோர்; வேத ஆகமங்களைக் கற்றுக் கைவந்தோர் ஆகிய எல்லோரும் சித்தராவர்.

விவேகானந்தர் இருக்கு முதலிய ஆரிய நால் வேதங்களின் கருத்துக்களையும் அமெரிக்கா சென்று பிரசாரம் செய்து உலகம் போற்றும்படி செய்தார். ஆனால், தமிழ் மறையான திருக்குறள் பிரசாரம் ஒன்றுமின்றித் தானாகவே உலகமுழுதும் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுபோற்றப் படுகிறது. சூரியனுக்குப் பிரசாரகர் வேண்டுமோ? தானாகவே பிரகாசிக்கும் தமிழ் மறையின் ஒரு பாகமான ஆயுள் மறையின் விரிவை நமது அறியாமையினாலும் அந்தகாரத்தினாலும் மூடியிருக்கிறோம். அவை நீங்க ஆயுள் மறையாகிய சூரியப் பிரகாசம் இனிது ஒளிரும்.

(தொடரும்.)

## அகத்தியன் முதலாவது ஆண்டுவிழா.

——:0:——

1942-ம் வருடம் பிப்ரவரி மாதம் 1-ந் தேதி காலை 8 மணிக்கு திருத்துறைப்பூண்டி நாரணப்பய்யர்சத்திரத்திலிருந்து மங்கல வாத்தியத்துடன் ஊர்வலமாக சுந்தரம் டாக்கீஸ் தியேட்டருக்கு தலைவர்களை அழைத்து வரப்பட்டது. 8-30 மணிக்கு கோயமுத்தூர் துடிசைக்கிழார் அ. சிதம்பரனார் அவர்கள், சிவப்பு வர்ணத்தையுடைய ஓங்காரக் கொடியை ஏற்றி வைத்ததும் வைத்தியர்கள் கொடிப்பாட்டுடன் வணக்கம் செய்தனர். 9-0 மணிக்கு Dr. S. வைத்தியலிங்கம் செட்டியார் கடவுள் வணக்கம் பாடியபின், திரு. துடிசைக்கிழார் கூட்டத்தை ஆரமபம் செய்துவைத்து 'கொடி வணக்கம்' என்பதைப்பற்றியும், 'சித்த வைத்தியம்' என்பதைப் பற்றியும், சொற்பொழி வாற்றினார்கள். பிறகு, தமிழரசு ஆசிரியர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து விரிவான முகவுரைப் பிரசங்கம் செய்தார்கள். சத்கிரி ஷண்முகானந்த சுவாமிகள் யோக தாரணைகள் செய்துகாட்டி யோகத்தைப்பற்றிய உண்மைகளை எடுத்துரைத்தார்கள். கோயமுத்தூர் திரு. C. K. குமரசாமி பிள்ளை அவர்கள் 'சித்த வைத்திய நூல் ஆராய்ச்சி' என்ற பொருள்பற்றி அரிய உபந்யாசம் செய்தார்கள். வடுகூர் சுவாமி லெக்ஷ்மிகாந்தம், குறுக்கை வித்வான் மீ. சுந்தரம் பிள்ளை, மடப்புரம் திரு. அழகுசுந்தரம் பிள்ளை, திருத்துறைப்பூண்டி திரு. P. ரெத்தினசபாபதி பிள்ளை (A. C. T. O.) முதலியோர்கள் சித்த வைத்தியத்தைப்பற்றி விளக்கிப் பேசினார்கள். கீழ்க்கண்ட 8 தீர்மானங்களும் ஏகமனதாய் நிறைவேறின. தலைவர் முகவுரைக்குப்பிறகு ஆசிரியர் G. தெக்ஷணாமூர்த்தி பிள்ளை அவர்கள் வந்தனோபசாரம் கூற, பகல் 1-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

மாலை 3 மணிக்கு அகத்தியன் காரியாலயத்தில் கூடிய வைத்தியர்களின் பிரத்தியேகமான கூட்டத்தில் தலைவர் சில அரிய விஷயங்களை எடுத்துரைத்து மகிழ்வித்தார்கள்.

## தீர்மானங்கள்.

1. கல்கத்தாவில் நடக்கும் ஆயுர்வேத வைத்தியசாலைகளைப் போலவே, தற்காலத்துக்கு ஏற்றமாதிரி புதிய முறையில் மருந்துகளைச் செய்ய, தென்னாட்டில் பார்மஸிகள் ஏற்படுத்தி அதனருகாமையில் மருந்து மூலிகைகளை உற்பத்தி செய்யும் பெரிய தோட்டங்களையும் சிருஷ்டி செய்யவேண்டுமென்று இக்கூட்டம் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. இந்திய வைத்தியம் புனர்ஜென்மம் பெற்று மீண்டும் தலையெடுக்க வேண்டுமாயின் வைத்தியர்களின் ஒற்றுமையும் ஐக்கியமும் அவசியமானது. இவ்வொற்றுமையை வளர்ப்பதற்கும், ஒருவருக்கொருவர் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கும், பல ரகசியங்களை உணர்ந்து கொள்வதற்கும், நமது கலைக்கு எவ்வித ஈனமும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வதற்கும், ஒருமுகமாக கிளர்ச்சி செய்வதற்கும், நமக்கென்று ஒரு பத்திரிகை அத்வாசியமாகும். ஆதலின் நமது பத்திரிகையாகிய அகத்தியனை ஆதரிக்குமுகத்தான் ஒவ்வொரு இந்தியன் மெடிக்கல் போர்டு மெம்பர்களும் தத்தம் தொகுதியில் ஐநூறு சந்தாதாரருக்குக் குறையாமல் சந்தா சேர்த்துக் கொடுக்கும் சேவையைச் செய்ய வேண்டுமென்று இக்கூட்டம் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.)

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

### கொடி வணக்கம்.

என்று உலகர்க்கு எடுத்துக் காட்டவும், அம்முறையைப் பழைய உன்னத நிலைக்குக் கொண்டுவர நாம் எல்லோரும் இங்கு கூடியுள்ளோம். அதற்கு உரிய வழிகளை வகுக்க இருக்கின்றோம். இனி எவ்வித இடர்ப்பாட்டிலும் பின்வாங்காமல் துவக்கிய காரியத்தை முடித்தே தீருவோம் என்று உலகத்தாருக்கு அறிவிக்கவே இக்கொடியானது தமிழ்நாட்டில் இந்த இடத்தில் மாத்திரம் அல்லாமல் ஒவ்வொரு ஊர்களிலும் பறக்கப் பாடுபட வேண்டும். நாம் இன்று இங்கு கூடிப் பேசுவதுடன் நின்றுவிடக் கூடாது. பேச்சுக்களை நடவடிக்கைக்குக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

அன்பர்களே! ஜர்மானியருடைய மருத்துவ முறை (Homeopathy) எவ்வளவு விரைவாக நம் நாட்டில் ஊர்கள்தோறும் பரவுகின்றது. மருத்துவக் கல்லூரியில் படியாதவன்கூட அம்முறையைக் கையாளுவதையும், நாம் இன்று பார்க்கிறோம். அதுபோல நாம் நம் சித்தர் முறையை முன்னுக்குக் கொண்டுவரப் பிரயாசைப்பட வேண்டும்.

ஆதி முறையாகிய சித்தர் முறையிலிருந்து பிரிந்த முறைகளில் ஒன்று ஜர்மானியர் முறை. இதனை நான் வெளியிட்டிருக்கும் சித்தர் வைத்திய சரிதத்தில் காணலாம். அந்நியநாட்டு முறை நம் நாட்டுக்கு ஒவ்வாது. நம் நாட்டு முறையாகிய சித்தர் முறையே நமக்கு ஏற்றது.

சித்தர் முறைக்கு ஒரு இடமோ மருத்துவசாலையோ (Laboratory) தேவை இல்லை என்றுகூடச் சொல்லலாம். ஏனென்றால் ஒவ்வொரு ஊர்களிலும் உள்ள காடுகளும் தோட்டங்களும் மருத்துவசாலைக்கு ஒப்பாகும். அவைகளிலுள்ள மூலிகைகளே மருந்துகளாகும். உலோகங்களை நீறு செய்ய எருவாமுட்டை எங்கும் கிடைக்கும். எந்த இடத்திலும் புடம் இடலாம். என்றாலும், தற்கால நாகரிகத்தை எண்ணி கல்கத்தாவில் ஆயுர்வேதத்திற்கு ஒரு தனி இடம் இருப்பதுபோல், சித்தர் முறைக்கு ஒரு தனிக் கட்டிடமும், மூலிகைத் தோட்டமும், நீறு செய்யும் இடமும் வேண்டும். நாம் எல்லோரும் அதற்கு ஆவன செய்ய வேண்டும். சர்க்கார் உதவியையும் பெறவேண்டும். இனி, நமது தாய் நாட்டின் வைத்தியர்கள் அனைவரும் இந்தக் கொடிக்கு வணக்கம் செய்துவிட்டு எதையும் தொடங்குவராக! சுத்த சிவப்புத்துணியின் மத்தியில் 'ஓம்' என்னும் பிரணவத்தை அமைப்பதே நமது கொடியாகும். இவ்வாறே அனைவரும் அமைத்துக் கொண்டு நமது இயக்கத்தைப் பலப்படுத்துவராக!

(11-ம் பக்கத் தொடர்ச்சி.)

## தீர்மானங்கள்.

3. எந்த தொகுதியின்பேரில் இந்தியன் மெடிக்கல் போர்டின் மெம்பராக இருக்கிருர்களோ, அவர்கள் அந்த தொகுதியில் இந்திய வைத்தியர்கள் ஒன்றுபடுவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டு மென்றும், அரசியல் நிகழ்ச்சிகளை அவ்வப்போது அவர்களுக்கு தெரிவித்து வேண்டியன எடுத்துச் செய்ய வேண்டுமென்றும், சங்கத்தின் அவசியத்தை வற்புறுத்தி ஆங்காங்கு சங்கங்கள் நிறுவ வேண்டுமென்றும் இச்சங்கம் ஷை மெம்பர்களைக் கேட்டுக்கொள்கிறது.

4. இந்திய வைத்தியர்கள் ஒரு பெரிய சமூகத்தைப் போன்றவர்கள். சமூக எழுச்சிகளுக்கு, கொடி உணர்ச்சி ஊட்டுகிறது. ஆகவே நமது இந்திய வைத்திய சமூகத்திற்கு ஒரு நிரந்தரமான கொடியை சிருஷ்டி செய்து, அதை எல்லாவூர்களிலும் போற்றிவணங்க வேண்டுமென்றும், ஷை கொடி வணக்கத்திற்கு ஏகோபித்து எல்லோரும் வணங்குவதற்குத் தகுந்த ஒரு வணக்கச் செய்யுளை எழுதித் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இக்கூட்டம் இந்திய மெடிக்கல் போர்டு மெம்பர்களைக் கேட்டுக்கொள்கிறது.

5. சித்த வைத்தியத்தை ஜீவிய தொழிலாக வைத்துக்கொண்டு கிராமாந்தரங்களில் வசித்துவரும் சித்த வைத்தியர்களில் பலர் பத்திரிகை ஞான மில்லாமல் சர்க்காரிடமிருந்து லைசென்ஸ் பெறும் காலவரையளவு அறியாமல் குறித்த காலத்தில் லைசென்ஸ் பெற தவறி இப்பொழுது சங்கடப்படுகிருர்கள். இவ்வாறு கஷ்டப்படுகிறவர்களின் தொகை சற்றேறக் குறைய பதினயிரம் பேருக்கதிகமாக இருக்கலாம். ஆதலின் அத்தகையோர் லைசென்ஸ் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

6. ஒவ்வொரு ஜில்லாக்களிலும் நல்ல விதிகளைக்கொண்டு ஒழுங்காக நடக்கக்கூடிய இந்திய வைத்திய ஜில்லா சங்கங்களை அமைக்க வேண்டுமென்று இந்தியன் மெடிக்கல் போர்டு மெம்பர்களனைவரையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

7. கிராமாந்தரங்களில் சட்ட திட்டங்களுக்குட்பட்டு ஒழுங்கான முறையில் ஏராளமான ஜனங்களுக்கு சிகிச்சை செய்துவரும் தர்ம வைத்தியசாலைகளை நடத்திவரும் R. I. M., வைத்தியர்களுக்கு அந்தந்த ஜில்லாவிலுள்ள லோக்கல் போர்டார் கண்டிரிபியூஷன் கொடுத்து உதவவேண்டு மென்று ஷை போர்டாரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

8. திருவாரூர் வைத்தியபூபதி G. கண்ணுசாமி பிள்ளையவர்கள் சித்த வைத்தியத்துக் காற்றியுள்ள சிறந்த ஊழியங்களைப் பாராட்டி அவருக்கு வைத்திய ரத்னம் என்ற பட்டத்தை அளிக்க வேண்டுமென்று இச்சபை சென்னை அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறது.

## இலகு வைத்தியப்பகுதி.

K. சுந்தரத்தம்மாள், R. I. M., M. C.

அரைக்கீரை சகல நோய்களையும் சாந்தம் செய்யும். கரும்பு கபம் நீக்கும். நெல்லிக்காய் பித்தவிஷம் இறக்கும். மாதுளை இரத்த சுத்திக்கு அற்புதமானது. அரத்தை கபத்தை யறுக்கும். மிளகு சர்வ விஷங்களையுங் களையும். சீரகம் பித்த அதிகரிப்பைக் குறைக்கும். கருணை மூல நோய்களுக்கு எமன். ஆவாரை மதுமேகங்களுக்கு வைரி. நிலஆவாரை மல விருத்தி செய்யும். அகத்தி, பித்தம், பைத்தியம், சித்தப்பிருமை, தேகக் காங்கை முதலிய நோய்களை யகற்றும். திப்பிலி, கபம், காசம் நீக்கும். அதிவிடயம், கடுக்காய்ப்பூ, சிறுநாகப்பூ இவை மூன்றும் அதிசாரம் கிராணி சீதபேதி முதலான நோய்களைக் கண்டிக்கும். கடுக்காய் சர்வ நோய்களையும் சங்கரித்து காயகல்ப பலன் தரும். (தொடரும்.)


# சுதேச சித்த வைத்திய மகாநாடு.

மருந்து பொருட்காட்சியும் அமைக்கப்படும்.

மார்ச்சு மாதம் 3-வது வாரத்தில் இம் மகாநாடு நடைபெறும்.

மருந்து பொருட்காட்சிக்கு இடந் தேவையானவர்கள் முன்னதாகவே எழுதவும்.

வரவேற்புக் கமிட்டி மெம்பர்களின் கட்டணம் ரூபா 3—0—0

விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்:—

P. கோவிந்தசாமி பிள்ளை,
காரியதரிசி,
மகாநாடு ஆபீஸ்,
தொழிற்சாலை பெரிய கடைவீதி,
கும்பகோணம்.


Edited, Printed and Published by G. DAKSHNAMOORTHI at his 'Victoria Press,' TIRUTURAIPUNDI.